# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,117 — 1935 ம் ௵ சித்திரைமீ 26 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய சட்டம்.**

**1935 ம்** ஆண்டு ஆடி மாசத்தில் கதிர்காம எசல திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திர சபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு செய்த பிரமாணங்கள்.

டி. பி. ஜயதிலக்க,
சயகாரிய மந்திரி.

சயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1935 ம் ஆண்டு வைகாசிமீ 12 ந் உ.

### பிரமாணங்கள்.

1\. (*a*) கதிர்காமத்தில் 1935 ம் ஆண்டு எசல திருவிழா நடக்கும் நாட்களும் யாத்திரிகர் கதிர்காமத்தில் தங்கக்கூடிய காலமும் 17 நாட்கள் மாத்திரந்தான். அதாவது 1935 ம் ஆண்டு ஆடி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 17 ந் திகதி முடியும்வரைக்கும்.

(*b*) முதலாவதாகச் சொல்லப்பட்ட தேதிக்கு முன்பாக வருகிற அல்லது குறிக்கப்பட்ட காலத்துக்குப்பின் நிற்கிற யாத்திரிகர்களை குற்றவாளியர்களாகக் காணப்படும்.

2\. "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டரின் மேல் அதிகாரத்திலும், "பார்வை செய்கிற உத்தியோகஸ்தர்" என்று பெயர் கொடுக்கப்பட்ட பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தரின் உடன் அதிகாரப் பார்வையிலும் இருக்கும் பின்னுவதாக சொல்லப்பட்ட உத்தியோகஸ்தருக்கு ஒரு வைத்திய உத்தியோகஸ்தரும் ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தரும் உதவி புரிவார்கள்.

3\. கதிர்காமத்தில் திருவிழா நடக்கும் காலத்தில் தொற்று வியாதி உண்டுபடின் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தருக்கு திருவிழாவை நிறுத்தவும் யாத்திரிகர்களை அந்த ஊரை உடனே விட்டு தங்கள் இடங்களுக்குப் போகும்படி செய்யவும் இன்ன பாதையாற் போகவேண்டுமென்றும் நியமிக்கவும் தத்துவமுண்டு.

4\. பார்வைசெய்யும் உத்தியோகஸ்தருக்கு கதிர்காமத்திலும் போகும் பயணத்திலும், திரும்பிச்செல்லும் பயணத்திலும் இதன்கீழ் குறிக்கப்பட்டவைகளைச்செய்ய அதிகாரமுண்டு:—

(*a*) யாத்திரிகர்களுக்கு கழுவவும், முழுகவும், தண்ணீரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும், மலசல பாதைக்குப் போகவும் வேறு வேறு தலங்களை நியமிக்கவும்;

(*b*) அந்த வகுப்பைச்சார்ந்த யாத்திரிகர் தங்கியிருக்கும்படி வெவ்வேறு தலங்களை நியமிக்கவும்;

(*c*) யாத்திரிகர் கூட்டமாக இன்ன பாதையால் செல்லவேண்டுமென்று நியமிக்கவும்;

(*d*) யாத்திரிகர்களுக்கு கொடுக்கப்படும் தீன் பகிர்ந்து கொடுத்தலைப்பார்த்து நடத்தவும்;

(e) நோய்கொள்ளும் யாத்திரிகர்களுக்குத் தங்கியிருக்கும்படி வெவ்வேறே தலத்தை நியமிக்கவும் அவ்வாட்களுடன் வேறொருவரையும் கலவாமலிருக்கும்படி பண்ணவும், அவர்களுக்குப் பயணம் போகக்கூடாதுபோனால் நிறுத்தி வைத்திருக்கவும்.

இவ்விதமான காரணங்களைக்கொண்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரினால் கொடுக்கப்படுகிற கட்டளையை ஏதாவது எவராவது மீறுபவர் குற்றவாளியாகக் காணப்படுவர்.

5\. இந்தப் பிரமாணங்களின் பொருட்டு "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" என்பதாவது:—

(*a*) கதிர்காமத்துப் பெரிய கோயிலைச் சுற்றி நாலு பக்கமும் அரைக்கட்டை தூரத்துக்குள் உள்ள பாகம்.

(*b*) செல்லக் கதிர்காமத்துப் பிள்ளையார் கோயிலைச் சுற்றி நாலு பக்கமும் காக்கட்டை தூரத்துக்குள் உள்ள பாகமும்.

6\. பயணத்தில் அல்லது தங்கியிருக்குமிடத்தில் சுகத்துக்குப் பழுதானதென்று பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது அப்படியான உத்தியோகஸ்தர் இல்லாதிருந்தால் பிரதான பொலீஸ் உத்தியோகஸ்தர் காணுந் தீன் சாமானெல்லாவற்றையும் பறித்து அழித்துப்போடப் பொலீசார் தத்துவமுடையவராயிருப்பர். இந்தக் கடமையை அல்லது வேறு எந்தக் கடமையையும் பொலீசார் செய்யும்போது அவ்விதஞ்செய்ய விடாமல் எவராவது தடை பண்ணுபவர் குற்றவாளியாகக் காணப்படுவர்.

7. பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரிடமிருந்து அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடமிருந்து உத்தரவுச்சீட்டு பெறாமல் மாடுகளை அல்லது வண்டி மாடுகளை தங்கியிருக்குமிடமிருந்து காற்கட்டைக் குட்பட யாராகுதல் கொண்டுவந்தால் அவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

8. உத்தரவுச்சீட்டுப் பெறுவோர் தங்கியிருக்குமிடத்தில் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரால் சனங்களின் பொதுச் சுகத்துக்காகவும், சுகாதாரத்துக்காகவும், போக்குவரவுக்கு தகுதியாயும் நியமிக்கப்படும் கட்டளைப் பிரமாணங்களை அனுசரிக்கக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

9. (1) (*a*) எவ்வித சாமான்களையும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் குறித்துவிடும் இடத்திலன்றி வேறெந்த இடத்திலும் விற்க வைத்திருக்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

(*b*) பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அவர்கள் இல்லாதிருந்தால் பிரதான பொலிஸ் உத்தியோகஸ்தர் சுகத்துக்குப் பழுதான போசனமென்று தீர்க்கும் எப்போசனத்தையும் விற்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

2. (*a*) சகல சாப்பாட்டுக்கடைகளும், தேத்தண்ணீர் கோப்பிக கடைகளும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் திருப்திக்கு துப்பரவாகவும் சுகாதாரத்துக்கு ஏற்றதாயும் வைத்திருக்க வேண்டும்.

(*b*) விற்பனைக்கு வைத்திருக்கும் எல்லாவிதமான கேக் வகைகளும் இனிப்புச் சாமான்களும், மற்றும் சமையல் செய்யப்பட்ட தீன்பண்டங்களும் இலையான்போகாதபடி செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிக்குள் வரிசையாக வைத்திருக்கவேண்டும்.

(*c*) மிஞ்சிய தேத்தண்ணீர், கோப்பி அல்லது பால் அல்லது மிச்சமான சாப்பாடு, சமையல்பாக்க கழிவுகள் அல்லது குப்பை, நிலத்திலே வீசப்படாது. ஆனால் இவைகளை சுகாதார வேலையாட்கள் அப்புறப்படுத்துவதற்காக பின்னால் குறிக்கப்பட்ட பாத்திரத்திலே சேர்த்துவைக்க வேண்டும்.

(*d*) வியாபாரத்துக்கு அல்லது வேறு முயற்சிக்குப் பாவிக்கப்படும் ஒவ்வொரு கட்டடத்திலும் அல்லது கொட்டிலிலும் நாலரை அடிக கனத்துக்குக் குறையாமலுள்ள லோகத்தினால் அல்லது மரத்தினால் செய்யப்பட்ட ஊத்தைப் பெட்டியொன்று இருக்கவேண்டும். அதில் அந்த இடத்திலுள்ள குப்பை மற்றும் கழிவு சாமான்களைப் போடவேண்டும். குப்பை அல்லது கழிவு சாமான்கள் போடும் பொழுது அல்லது வெளியே எடுக்கும்பொழுது தவிர மற்ற எல்லா வேளைகளிலும் அதை ஒரு லோக அல்லது மரமூடியினால் மூடப்பட்டிருக்கவேண்டும்.

10. யாராயினும் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால் நியமித்திருக்குமிடத்தைவிட வேறெந்த விடத்திலும் மலசலங் கழித்தால் அல்லது மலத்தை மண்ணால் மூடாவிட்டால், அல்லது பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரால் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றிலிறங்க அல்லது குளிக்கச் சம்பவித்தால் அப்படிச் செய்தவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

11. தொற்று வியாதியால் பீடிக்கப்பட்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தருக்கு அல்லது வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது பிரதான பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு அது விஷயத்தை அறிவிக்கத் தவறும எவரும் அல்லது அவ்வியாதி வந்த நோயாளியை ஒளித்து வைப்பதற்கு உதவிசெய்யும் அல்லது தூண்டிவிடும் எவரும் குற்றமுடையவராகக் காணப்படுவர்.

12. சகல பேர்களும் பயணத்திலும் கதிர்காமத்திலும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது பிரதான பொலிஸ் உத்தியோகஸ்தர் நியமிக்குமிடத்தில் விடுதிவிட வேண்டும். அப்படிச்செய்ய மறுக்கும் அல்லது செய்யாது விட்டுவிடும் எவரும் குற்றமுடையவராகக் கொள்ளப்படுவர்.

13. பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் உத்தரவை முன்னதாக பெற்றுக்கொள்ளாமல் கதிர்காமத்தில் பெரிய தெருக்களுக்குச்சேர்ந்த இடத்தை பிடிக்கக்கூடியதாக யாராவது ஒரு கொட்டிலைக் கட்டினாலும், அல்லது ஒரு கட்டடத்தை பெருப்பித்துக் கட்டினாலும் குற்றமுடையவராகக் காணப்படுவார்.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 1,041 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் அல்லது அதன் எப்பங்குக்கேனும் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1935 ம் ௵ (ஏப்பிறில்) சித்திரைமீ 26 ௳ தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1935 ம் ௵ (மார்ச்) பங்குனிமீ 25 ௳ தேதியிலன்று கண்டிக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்தியமாகாண அரசாட்சி ஏஜண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வெயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்தியமாகாணம், கண்டி டிஸ்திறிக், உடபலாத்த டிவசனில் கண்டுகாற இகல கோறளையிலுள்ள கெசெலந்த கிராமத்திலிருக்கும் கீழ் காணப்படும் காணித்துண்டுகள் :—

பிரதமபட இல. A 100.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | தேவத்தவத்தகெல அல்லது இசோதனமன்கட (நீர்பாச்சும் வாய்க்காலோடு சேமித்த நிலம்) .. .. | 0 | 0 | 6 |
| 2 | ஷை .. .. | 0 | 0 | 15 |
| 3 | தேவத்தவத்தகெல அல்லது இசோதனமன்கட .. .. | 0 | 0 | 36 |
| 4 | ஷை .. .. | 0 | 0 | 32 |
| 5 | ஷை (தேவத்தஎலவோடு சேமித்த நிலம்) .. | 0 | 0 | 10 |
| 6 | ஷை (தேவத்தவத்த எலவோடும் நீர்ப்பாச்சல வாய்க்காலோடும் சேமித்த நிலம்) .. | 0 | 1 | 9 |
| 7 | ஷை (தேவத்தஎலாவுக்கும் ஊற்றுக்கும் சேமிக்கிறதற்கு) | 0 | 0 | 14 |
| 8 | ஷை ( ஷை ) | 0 | 0 | 3 |
| 9 | ஷை (தேவத்தஎலாவுக்கும் ஊற்றுக்கும் சேமித்த நிலம்) | 0 | 0 | 6 |
| 10 | ஷை (தேவத்தஎலாவுக்கும் ஊற்றுக்கும் சேமிக்கிறதற்கு) .. | 0 | 3 | 34 |
| 11 | ஷை (தேவத்தவத்தஎலாவுக்கும் நீர்ப்பாச்சல் வாய்க்காலுக்கும் சேமித்த நிலம்) .. | 0 | 2 | 24 |
| 12 | ஷை .. .. | 0 | 0 | 35 |
| 13 | ஷை (நீர்பாய்சல் வாய்க்காலோடு சேமித்த நிலம்) .. | 0 | 0 | 3 |
| | | 2 | 3 | 27 |

எல்லை: வடக்கு-முடி உரித்தாடும் தேவத்தவத்த அல்லது இசோதனமன்கட (பி. ப. 8,419/8) உரிமைப்படங்கள் 412,343, 415,437, ல் உரித்தாடப்படும் காணிகள், நீர்பாச்சல் வாய்க்கால் ; கிழக்கு-உரிமைப்படம் 54,734 ல் உரித்தாடப்படும் காணி ; தெற்கும் மேற்கும்-தேவத்தவத்தஎல.

---

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 1,042 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1935 ம் ௵ (ஏப்பிறில்) சித்திரைமீ 26 ௳ தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1935 ம் ௵ (மார்ச்) பங்குனிமீ 25 ௳ தேதியிலன்று கண்டிக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏசண்டர், கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்தியமாகாண அரசாட்சி ஏஜண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், உடதும்புற டிவிசன், கம்பகா கோறளை மேற்கில் கலியல கிராமத்திலிருக்கும் கீழ் காணப்படும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் இல. 9,093.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | எம்பதில்லகெற்றியகேன (கன்சபா தெருவோடு சேமித்த நிலம்) .. | 0 | 1 | 6 |
| 2 | ஷை .. | 1 | 3 | 39 |
| 3 | ஷை .. .. | 1 | 0 | 0 |
| 4 | மாடுகொடகேன (தெருவுக்கு சேமித்தது) .. | 0 | 0 | 7 |
| 5 | மாடுகொடவத்த .. .. | 0 | 1 | 15 |
| 6 | ஷை (பெரிய தெருவோடு சேமித்த நிலம்) .. | 0 | 0 | 14 |
| 7 | எம்பதில்லகெற்றியகேன ( ஷை ) .. | 0 | 0 | 6 |
| 8 | ஷை (பெரிய தெருவோடும் கன்சபா தெருவோடும் சேமித்த நிலம்) | 0 | 0 | 38 |
| | | 4 | 0 | 5 |

எல்லை : வடக்கு-கன்வெலாவிலிருந்து வரும் கன்சபா பாதையும் முடி உரித்தாடும் எதொலுவேகேனயும்; கிழக்கு-மாஉசவெசெலி (முடி) யும் மருக்துசாலே காணயும் (முடி) ; தெற்கு-தெருவும், டபிள்யு. கீன்பண்டாவும் மறுவும் உரித்தாடும் எம்பதில்லகெறறியகேன ; மேற்கு-டபிள்யு. கீன்பண்டாவும் மறுவும் உரித்தாடும் எம்பதில்லகெற்றியகேன.

II.—பிரதமபட இல. 9,093.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 9 | எகொடகேன .. .. | 1 | 1 | 10 |
| 10 | ஷை (பெரிய தெருவோடு சேமித்த நிலம்) .. | 0 | 1 | 4 |
| 11 | எகொடகேன .. .. | 1 | 0 | 14 |
| 12 | ஷை (கன்சபா பாதையோடு சேமித்த நிலம்) | 0 | 0 | 32 |
| 13 | எகொடகேன (ஆற்ரேருடு சேமித்த நிலம்) .. | 0 | 2 | 4 |
| | | 3 | 1 | 24 |

எல்லை : வடக்கு-உரிமைப்படம் 3?4,196 ல் உரித்தாடும் காணி, முடி உரித்தாடும் எம்பித்தில்லகெற்றியசேன (பி. ப. 8,304/4), கண்டி—அலுக்நுவர தெரு, வ. ஜி, தொரேருனிஸ் அப்புகாமி உரித்தாடும் மடிக்தகேன ; கிழக்கு-மடிக்தகவ எல ; தெற்கு-கலியாலகோயில் பராமரிப்புககாரர் உரித்தாடும் பன்சாலவத்தகேன, யு. எல். லொக்கு பண்டாவும் மறுவும் உரித்தாடும் அடத்தபன்சாலகவகேன, கண்டி—அலுத்நுவர தெரு, வ. எல். டேவிட் அப்புகாமி உரித்தாடும் கலாவெலகெதறகேன ; மேற்கு-பி. றன்பண்டாவும் மறுவும் உரித்தாடும் பட்டியகும்புறகெதறகேன.

---

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நொம்பர் 1,043 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அல்லது எப்பங்குககேனும் அதில் எச்சோககைக்கேனும் தமககு உரித்துண்டென்று 1935 ம் ௵ (ஏப்பிறில்) சித்திரைமீ 26 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருககுமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணய சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1935 ம் ௵ (மார்ச்) பங்குனிமீ 25 ந் தேதியிலன்று கண்டிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

டீ. சீ. ஆர் குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜண்ற, கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுககொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அடடவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், கரிஸ்பத்து டிவிசனில் மெடசியபத்துவாவிலுள்ள விருகும்பொல கிராமத்திலிருக்கும் கீழ் சொல்லப்படும் காணித்துண்டுகள் : —

பிரதமபட இல. A 9.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | வெலிகொட எஸ்ரேற் .. .. | 0 | 0 | 4 |
| 2 | வெலிகொடகந்த .. | 12 | 1 | 31 |
| 3 | கலுகலதென்ன எஸ்ரேற் .. | 0 | 0 | 6 |
| 4 | வெலிகொடகந்த (தெருவோடு சேமித்த நிலம்) | 0 | 3 | 11 |
| 5 | ஷை (ஆற்ரேருடு சேமித்த நிலம்) | 0 | 1 | 13 |
| 6 | ஷை ( ஷை ) | 1 | 2 | 24 |
| 7 | ஷை (தெருவோடுசேமித்த நிலம்) | 0 | 2 | 31 |
| 8 | வெலிகொடகந்தவத்த .. .. | 1 | 1 | 7 |
| 9 | ஷை .. .. | 1 | 0 | 11 |
| 10 | வெலிகொடகந்த .. .. | 5 | 3 | 23 |
| 11 | கலுகலதென்னவனத்த (தெருவோடு சேமித்த நிலம்) | 0 | 0 | 6 |
| 13 | வெலிகொடகந்த ( ஷை ) | 0 | 1 | 0 |
| 14 | கலுகலதென்ன (அம்பலத்துக்கும் தெருவுககும் சேமிக்கிறதற்கு) .. | 0 | 0 | 4 |
| | | 24 | 2 | 11 |

எல்லை :—வடக்கு-எம். என். அசன் முகமது உரித்தாடும் வெலிகொடகந்த எஸ்ரேற், ஜே. லாமாசன்றின் உரிமைக்காரர் உரிததாடும் கலுகலதென்ன எஸ்ரேற், ஜே. லாமாசான்றின் உரிமைக்காரரால் சேர்த்துக்கொண்ட கலுகலதென்ன எஸ்ரேற் (தெருவுக்கு சேமித்த நிலம்), பெரிய தெரு, கலுகலதென்ன வங்களாவுக்குப் போகும் தெரு ; கிழககு-வெலிகொடஎல, ஜே. லாமாசன்றின் உரிமைககாறர் உரித்தாடும் கலுகலதென்னகும்புற, முடியால் குத்தகைககு கொடுக்கப்பட்ட கலுகலதென்ன எஸ்ரேற் (பி. ப. A 9/12), பெரிய தெரு ; தெற்கு-முடியால் குத்தகைக்குக் கொடுககப்பட்ட கலுகலதென்ன எஸ்ரேற் (பி. ப. A 9/17); மேற்கு-முடியால் உரித்தாடப்படாத கலுகலதென்ன எஸ்ரேற் (பி. ப. A 9/15), முடியால் குத்தகைககு கொடுத்த கலுகலதென்ன எஸ்ரேற் (பி. ப. A 9/16), உரிமைப்படம் 135,440 ல உரித்தாடப்படும் காணி, ஜே. லாமாசன்றின் உரிமைக்காறர் உரித்தாடும் கலுகலதென்ன எஸ்ரேற், எம். ரி. எம். சுபாயிரும் மறுவும் உரித்தாடும் வெலிகொட எஸ்ரேற்.

---

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நொம்பர் 1,044 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1935 ம் ௵ (ஏப்பிரில்) சித்திரைமீ 26 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1935 ம் ௵ (மார்ச்ச) பங்குனிமீ 25 ந் தேதியிலன்று கண்டி கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜன்றர், கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்தியமாகாண அரசாட்சி ஏஜண்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக் உடபுலதகம டிவிசன், பஸ்பாகே கோறளேயில் பத்தனுபிட்டி கிராமத்திலிருக்கும் கீழ் காணப்படும் காணித்துண்டுகள் :—

பிரதமபடத்து இல. 8,830.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 3 | தியபொக்குன மூக்கலான .. | 10 | 2 | 21 |
| 4 | ஷை .. .. | 0 | 0 | 22 |
| | | 10 | 3 | 3 |

எல்லை : வடக்கு-முடிஉரித்தாகிங் தியபொக்குனகேனே அல்லது வறக்காவதென்ன (பி. ப. 7,142/84) முடி உரித்தாடும் வறக்காவதென்ன (பி. ப. 7,142/87 & 88); கிழக்கு-உரிமைப்படங்கள் 296,139, 53,373, 60,436 ல் உரித்தாடப்படும் காணி; முடியால தீர்த்துககொடுக்கப்பட்ட தியபொக்குன மூக்கலான (பி.ப. 8,830/5 & 6), தியபொக குனஎல ; தெற்கும் மேறகும்-தியபொக்குனஎல.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்த

நி. 1,045 (கண்டி).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில எச்சோங்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1935 ம் ஹூ (ஏப்பிறில்) சித்திரைமீ 26 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்திமுடிக் குரிய காணியாக அதன் விஷயத்தில் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனல் அறிவித்தல்கொடுக்கப்படுகின்றது.

1935 ம் ஹூ (மார்ச்) பங்குனி மாதம் 25 ந் திகதி யிலன்று கண்டி கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிக மான விபரம் மத்தியமாகாண அரசாட்சி ஏஜண்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர்ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக வெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக் காணிகளுககுள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்தியமாகாணம், கண்டி டிஸ்திறிக், உடபுலத்கம டிவிசனில் பஸ்பாகெ கோறளேயில் வறகாவ கிராமத்திலிருக்கும் கீழ் காணப்படும் காணித்துண்கள் :—

பிரதமபடத்து இல. 8,830.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | கலமுதுனேபத்தன, வெறலுககாகின்னபத்தன, பொலங்கொல்லபத்தன மறுவும் .. | 2 | 2 | 23 |
| 2 | தியபொக்குனமூககலான .. .. | 7 | 0 | 12 |
| 9 | ஷை .. .. | 6 | 3 | 22 |
| 10 | கலமுதுனமூக்கலான .. .. | 4 | 3 | 11 |
| 11 | கலமுதுனபத்தன, வெரலுகஹாஹீன்னபத்தன, பொலொங்கொல்லபத்தன, மறுவும் | 5 | 2 | 38 |
| 12 | வனகியன்னவகொம்மன .. | 3 | 0 | 33 |
| 13 | வனகியன்னவபத்தன .. | 0 | 2 | 38 |
| 14 | வனகியன்னவகொம்மன .. | 0 | 1 | 31 |
| 15 | வெரலுகஹாஹீன்னபத்தன, பொலொங்கொல்லபத்தன, வேறுவ .. | 12 | 2 | 14 |
| 17 | பொலொங்கொல்லபத்தன .. | 0 | 0 | 27 |
| 18 | வெரலுகஹாஹீன்னபத்தன, பொலொங்கொல்லபத்தன, மறுவும் .. | 5 | 2 | 18 |
| | | 49 | 3 | 27 |

எல்லை :—வடக்கு-உரிமைப்படம் 360,096 ல் உரித்தாடப் படும்காணி, முடிஉரித்தாடும் நுககினகொமானயும் நுககின பத்தனேயும் (பி. ப. 7,142/67) முடி உரித்தாடும் வனுனஎல பத்தன, கட்டுகித்துலேகொம்மன, கட்டுகித்துலேபத்தன, பனுனஎல நுககினகொம்மன, நுககினபத்தன, பனுனஎல கொம்மன, டங்ககாபத்தன, டங்ககா அல்லது நுககினபத் தன (பி. ப. 7,142/53); கிழக்கு-தியபொககுனஎல, முடியால் தீர்த்துககொடுத்த தியபொக்குன அஸ்வெடும (பி. ப. 8,830/8) உரிமைபடம் 198,204 ல் உரித்தாடப்படும் காணி, ஆர். பெர் ஞக்திசின் (உரிமைக்காறரால் உரித்தாடப்படும் மவுன்ற் காமல் எஸ்ரேற் தேயிலே), முடியால் தீர்த்துக்கொடுத்த பொலலொங்கொல்லகேன (பி. ப. 8,830/16), அர்னெலிஸ் மென்டிஸ் உரித்தாடும், பொலொங்கொல்லவத்த, உரிமைப் படங்கள் 245,474, 161,483 ல் உரித்தாடப்படும் காணி முடி யால் தீர்த்துக்கொடுதத வததலகேகேனே (பி. ப. 8,830/19), பில்லகவகும்புறகேன (பி. ப. 8,830/22) பொல்ககாகொட்டு வேவத்த (பி. ப. 8,830/23,) பொல்ககாகொடடுவேவன (பி.ப. 8,830/24) ; தெறகு-முடியால் தீர்த்துக்கொடுத்த சாம்ஞெருக் எஸ்ரேற் பி. ப. 8,830/25), உரிமைப்படம் 160,938 ல் உரித் தாடப்படும் காணி ; மேற்கு-உரிமைப்படம் 160,938 ல் உரித் தாடப்படும் காணி, கன்சபாபாதையும், பிறைடின் பாதை யும்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நி. 1,046 (கண்டி).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்தைகேனும் தமக்கு உரித்துண்டென்று 1935 ம் ஹூ (ஏப்பிறில்) சித்திரைமீ 26 ந் தேதியிலிருந்து மூன்று மாசகாலத்திறகுள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக் குரிய காணியாக அதன் விஷயத்திற செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனல் அறிவித்தல் கொடுக்கப்படு கின்றது.

1935 ம் ஹூ (மார்ச்) பங்குனிமீ 25 ந் தேதியிலன்று கண்டிக கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏஜன்ற, கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிக மான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏஜண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுககொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

(c) இவ்வறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்கும் காணித் துண்டுகளி லுட்பட்டிராது கீழ்க்காணு மெல்லேகட் குட் படவிருக்குங் காணித்துண் டேதுவாயினும் மேற்படி யறிவித்தலின் கீழ் விசாரணைபண்ணப்படமாட்டாதது மன்றி அவ்வித காணித்துண்டை குறித்து உரிமை சொல்லவும் வேண்டியதில்லே.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், உடதும்புற டிவிசன் கந்தகே கோறளேயில் தலகுன கிராமத்திலிருக்கும் கீழ் காணப்படும் காணித்துண்டுகள் :—

பிரதமபட இல. A 27.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | நிசறுவேமூக்கலான அல்லது மடித்தியா கலமூக்கலான (தலகுன ஓயாவோடு சேமித்தது) .. .. | 0 | 3 | 23 |
| 2 | நிசறுவேகும்புற .. .. | 1 | 0 | 5 |
| 3 | நிசறுவேவன (தண்ணீர் பாச்சல்வாய்க்கா லோடு சேமித்தது) .. . | 0 | 0 | 6 |
| 4 | நிசறுவேவன .. .. | 0 | 2 | 12 |
| 5 | மடித்தியாகலமூக்கலான, வெவல்கெற்றிய மூக்கலான, தாலளங்தென்னமூக்கலான | 157 | 1 | 1 |
| 9 | குனுமுடுவாகலமூக்கலான, தாவளங்தென் னமூக்கலான .. .. | 11 | 1 | 28 |
| 10 | குனுமுடுவாகலகவ்வன அல்லது தாவளங் தென்னவன அல்லது மடித்தியாகலவன | 8 | 3 | 12 |
| 12 | பனளகந்த அஸ்வெடும .. .. | 1 | 0 | 5 |
| 13 | சிறிநேந்தாகேவன .. .. | 0 | 1 | 15 |
| 14 | ஷை (அடிப்பாதையோடு சேமித்தது) | 0 | 0 | 15 |
| 15 | சிறிநேந்தாகேகும்புற .. .. | 1 | 1 | 6 |
| 16 | சிறிநேந்தாகேவன .. .. | 0 | 2 | 26 |
| 17 | மடித்தியாகலவன அல்லது கொங்கலதென் னவன (கொங்கலதென்ன தொலவோடு சேமித்தது) .. .. | 0 | 1 | 32 |
| 18 | மடித்தியாகலவன அல்லது கொங்கலதென் னவன .. .. | 1 | 0 | 15 |
| 19 | ஷை .. .. | 0 | 2 | 38 |

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 20 | மடித்தியாகலகும்புற அல்லது கொங்கல தென்னகும்புற .. .. | 1 | 3 | 1 |
| 21 | மடித்தியாகலவன அல்லது கொங்கலதென்னவன (கொங்கலதென்ன தொலவோடு சேமித்தது) .. .. | 0 | 0 | 24 |
| 22 | மடித்தியாகலவன அல்லது கொங்கலதென்னவன .. .. | 0 | 0 | 34 |
| 23 | தாவலந்தென்னமுக்கலான, மடித்தியாகலமூக்கலான, வெவல்கெற்றியமூக்கலான | 103 | 0 | 11 |
| 24 | மடித்தியகலமூக்கலான (அடிப்பாதையோடு சேமித்தது) .. .. | 0 | 1 | 3 |
| 25 | மடித்தியகலமூக்கலான .. .. | 0 | 0 | 29 |
| 26 | குருமுடுவாகலகவவன அல்லது தாவளந்தென்னவன .. . | 0 | 0 | 36 |
| 27 | ஷை (நீர்பாச்சல வாய்க்காலோடு சேமித்தது).. | 0 | 0 | 34 |
| 28 | குருமுடுவாகலகவ்வன அல்லது தாவளந்தென்னவன .. .. | 0 | 1 | 31 |
| 30 | குருமுடுவாகலகவவத்த (நீர்பாச்சல வாய்க்காலோடு சேமித்தது) | 0 | 0 | 13 |
| 32 | தாவளந்தென்னமூக்கலான ( ஷை ) | 0 | 0 | 7 |
| 38 | தாவளந்தென்னபிட்டிய .. .. | 6 | 0 | 37 |
| 39 | ஷை .. .. | 0 | 0 | 23 |
| | | 298 | 3 | 2 |

எல்லை : வடக்கு-டபிள்யு உக்குமெனிக்காவும், ஜி. ஜி. உக்குல்ண்டாவும் மறுவும் உரித்தாடும் தலகுளையவன ஆர். எம். டிங்கிரி பண்டாவும் மறுவும் உரித்தாடும் செறுகஸ்பகாயவன, டபிள்யு. உக்குமெனிக்கா உரித்தாடும் வெவல்கெற்றியவன, டபிள்யு. உக்குமெனிக்கா உரித்தாடும் வெவல்கெற்றியகும்புற, டபிள்யு. உக்குமெனிக்கா உரித்தாடும் வெவல்கெற்றியவன, டி. கிரிபண்டாவும் மறுவும் உரித்தாடும் வெவல்கெற்றியவன, பி. ஜி. மெனிக்குரூனே உரித்தாடும் கோடயங்கலவன, வ. கிரிபண்டாவும் மறுவும், டி. கிரிபண்டாவும் மறுவும் உரித்தாடும் கலபொககவன, பி, மெனிக்குரூனேயும் டி. ஜி. கிரிபண்டாவும் உரித்தாடும் தலசொல்லவன ; கிழக்கு-கே. ஜி. உக்குபண்டாவும் மறுவும் உரித்தாடும் அம்பககாவரதம்மனவன, முடி உரித்தாடும் தாவளந்தென்னமூக்கலான (பி. ப. A 27/6), முடி உரித்தாடும் தாவளந்தென்னபிட்டிய (பி. ப. A 27/7), முடி உரித்தாடும் குருமுடுவாகலவன (பி. ப. A 27/8), முடி உரித்தாடும் குருமுடுவாகலகெலி (பி ப. 9,085/1 & 2), முடி உரித்தாடும் குருமுடுவாகலமூக்கலானவும் தாவளந்தென்னமூக்கலானவும் (பி. ப. A 27/34), முடி உரித்தாடும் தாவளந்தென்னபிட்டியா (பி. ப. A 27/37), முடி உரித்தாடும் தாவளந்தென்னகும்புற (பி. ப. A 27/41) : தெற்கு-முடி உரித்தாடும் தாவளந்தென்னபிட்டி (பி. ப. A 27/42), கண்டியிலிருந்து வீரகற்தோட்டைக்குப் போகுந் தெரு ; மேற்கு-வட்டகெட்டிய தொலவும் தலகுளையாவும்.

---

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

### காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

### நி. 1,047 (கண்டி).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1935 ம் ௵ (ஏப்பிறில்) சித்திரைமீ 26 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அககாணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதனை விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1935 ம் ௵ (மார்ச்) பங்குனிமீ 25 ந் தேதியலன்று கண்டிக் கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டீ. சீ. ஆர். குணவார்தன,
உதவி அரசாட்சி ஏஜன்ற, கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏஜண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

### அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், உடதும்பற டிவிசன், கந்தக கோறளேயில் பனவெலூல கிராமத்திலிருக்கும் கீழ் காணப்படும் காணித்துண்டுகள் :—

#### I.—பிரதமபட இல. 9,085.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | குருமுடுவாகலகெல .. .. | 4 | 2 | 26 |
| 2 | ஷை .. .. | 4 | 3 | 34 |
| 3 | பாதன்கெற்ற .. .. | 7 | 1 | 26 |
| 4 | கினககாமடித்த .. . | 4 | 0 | 16 |
| | | 21 | 0 | 22 |

எல்லை ; வடக்கு-முடி உரித்தாடும் குருமுடுவாகலவன ; கிழக்கு-முடி உரித்தாடும் அம்பககாவரதமனகெலே; தெற்கு-முடி உரித்தாடும் தாவலந்தென்னபிட்டிய (பாண் நிலம்) ; மேற்கு-முடி உரித்தாடும் குருமுடுவாகலகெலெயும் தலகுன கிராம எல்லையும்.

#### II.—பிரதமபட இல. A 27.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 6 | தாவளந்தென்னமூக்கலான .. | 6 | 2 | 11 |
| 7 | தாவளந்தென்னபிட்டிய .. | 6 | 2 | 8 |
| 8 | குருமுடுவாகலவன .. | 2 | 0 | 8 |
| | | 15 | 0 | 27 |

எல்லை : வடக்கும் கிழக்கும்-கே. ஜி. உக்குபண்டாவும் மறுவும் உரித்தாடும் அம்பககாவரதமனவன ; தெற்கு-முடி உரித்தாடும் குருமுடுவாகலகெல (பி. ப. 9,085/1) ; மேற்கு-முடி உரித்தாடும் மடித்தியகலமூக்கலான வெவல்கெற்றியமூக்கலான, தாவளந்தென்னமூக்கலான (பி. ப. A 27/5).

#### III.—பிரதமபட இல. A 27.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ | ப. |
|---|---|---|---|---|
| 34 | குருமுடுவாகலமூக்கலானவும் தாவலந்தென்னமூக்கலானவும் .. .. | 6 | 1 | 15 |
| 35 | தாவளந்தென்னபிட்டியாவும் தாவளந்தென்னமூக்கலானவும் .. .. | 2 | 0 | 14 |
| 36 | தாவளந்தென்னமூககலான .. | 17 | 2 | 9 |
| 37 | தாவளந்தென்னபிட்டிய .. | 9 | 0 | 11 |
| 40 | தாவளந்தென்னமூககலான .. | 0 | 3 | 23 |
| 41 | தாவளந்தென்னகும்புற.. .. | 1 | 3 | 2 |
| 42 | தாவளந்தென்னபிட்டிய (பெரிய தெருவோடு சேமித்த நிலம்) .. .. | 0 | 0 | 17 |
| | | 37 | 3 | 11 |

எல்லை : வடக்கு-முடி உரித்தாடும் கினககாமடித்த (பி. ப. 9,085/4),எச். ஜி. கிரிவண்டாவும் மறுவும் உரித்தாடும் வத்தலவத்துபிற்றியவன் ; கிழக்கு-முடி உரித்தாடும் குருமுடுவாகலகெல(பி. ப. 9,085/2),முடி உரித்தாடும் பாத்தன்கெற்ற (பி. ப. 9,085/3),முடி உரித்தாடும் கினககாமடித்த (பி. ப. 9,085/4),எச் ஜி. கிரிவண்டாவும் மறுவும் உரித்தாடும் வத்தலவத்துபிற்றியவன ; தெற்கு-மலகந்துற, எச். ஜி. கிரிபண்டாவும் மறுவும் உரித்தாடும் வத்தாளவத்துப்பிட்டியவன, முடி உரித்தாடும் தாவளந்தென்னமூககலான (பி. ப. 8,713/2), முடி உரித்தாடும் தாவளந்தென்னபிட்டிய (பி. ப. 8,713/1),முடி உரித்தாடும் தாவளந்தென்னமூக்கலானவும் தாவளந்தென்னபிட்டியாவும் (பி. ப. 8,713/3), கண்டியிலிருந்து வீரகந்தோட்டைக்குப் போகும் தெருவும்; மேற்கு-கண்டியிலிருந்து வீரகந்தோட்டைக்குப் போகும் தெரு, முடி உரித்தாடும் தாவளந்தென்னபிட்டிய (பி. ப. A 27/38, 39), முடி உரித்தாடும் குருமுடுவாகலமூககலானவும் தாவளந்தென்னமூக்கலானவும் (பி. ப. A 27/9), முடி உரித்தாடும் கினககாமடித்த (பி. ப. 9,085/4), முடி உரித்தாடும் பாதன்கெற்ற (பி. ப. 9085/3), முடி உரித்தாடும் சல்லு பாதையும்.

---

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

### காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

### நி. 1,048 (இரத்தினபுரி).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1935 ம் ௵ (ஏப்பிறில்) சித்திரைமீ 26 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி

அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்ய வேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1935 ம் ஸ்ரீ (பெப்புருவரி) மாசிமீ 26 ந் தேதியிலன்று கொழும்பிலுள்ள காணியுரிமை நிர்ணயப்பகுதிக் கந்தோரிற் கொடுக்கப்பட்டது.

எல். ஜே. செனவிறத்ன,
காணியுரிமை நிர்ணய உதவி உத்தியோகஸ்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஒப்பிசர்) காணி நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுககுள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

(c) இவ்வறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்குங் காணித் துண்டுகளி லுட்பட்டிராது கீழ்க்காணு மெல்லைகட் குட்படவிருக்குங் காணித்துண்டு எதுவாயினும் மேற்படியறிவித்தலின் கீழ் விசாரணைபண்ணப்பட மாட்டாததுமன்றி அவ்வித காணித்துண்டைக் குறித்து உரிமை சொல்லவும் வேண்டியதில்லை.

அட்டவணை.

சபறகமுவ மாகாணம், இரத்தினபுரி டிஸ்திறிக், குறுவிற்றிக் கோறளை, பல்லேபத்துவைச்சார்ந்த மிற்றிஹெலகம கிராமத்திலுள்ள கீழ்க்காணுங் காணித்துண்டுகள்: இக் காணித்துண்டுகளெல்லாங் கீழ்க்காணு மெல்லைகட்குளிருக்கின்றன :—

வடக்கு: இத்தமல்கொட கிராமத்தின் எல்லை, இத்தமல் கொட கிராமத்தின் எல்லை (கனேகொட எலவின் பகுதி), இத்தமல்கொட கிராமத்தின் எல்லை;

கிழக்கு: கனேகொட கிராமத்தின் எல்லை;

தெற்கு: புலுகஹபிற்றிய கிராமத்தின் எல்லை, புலுகஹபிற்றிய கிராமத்தின் எல்லை (எலவின் பகுதி), பவிகல கிராமத்தின் எல்லை (பொத்தெனியேதொல), பவிகல கிராமத்தின் எல்லை;

மேற்கு: இத்தமல்கொட கிராமத்தின் எல்லை, இத்தமல் கொட கிராமத்தின் எல்லை (குறுகேகுகீன தொலவின் பகுதி).

இலங்கை யளவை கிராமப்படம் நி. 660.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 2 | கிறிஅத்துலேவத்த .. .. | 0 | 0 | 28 |
| 5 | கனசபாவ ஞேட்டுகள் .. .. | 0 | 1 | 32 |
| 7 | கிறிஅத்தலே .. .. | 0 | 1 | 16 |
| 8 | கணத்தேவனவத்த .. .. | 0 | 1 | 1 |
| 9 | தென்னபிச்சவனவத்த, கணத்தேவனவத்த | 0 | 1 | 26 |
| 14 | கனேகொடஎல (அரைவாசி விசாலம்) .. | 0 | 0 | 22 |
| 19 | கட்டுவகந்தேவன .. .. | 1 | 0 | 21 |
| 20 | கனசபாவஞேட்டு .. .. | 0 | 0 | 25 |
| 21 | கட்டுவகந்தேவத்த .. .. | 0 | 3 | 8 |
| 23 | கட்டுவகலகபல்லேவன .. .. | 1 | 2 | 0 |
| 24 | மிற்றிஹெலதொல .. | 3 | 1 | 10 |
| 25 | கல்லமுனேவன .. .. | 0 | 3 | 21 |
| 26 | கணத்தவன .. .. | 0 | 2 | 33 |
| 27 | பெறககவத்த .. .. | 0 | 2 | 4 |
| 29½ | கிறிஅத்துலேவத்த .. .. | 0 | 1 | 9 |
| 30 | குறுகேகுனேதொல (அரைவாசி விசாலம்) | 0 | 1 | 35 |
| 31 | கல்முனவனவத்த கிறிஅத்துலேவத்த, தங்கஸ்தெனியேவனவத்த (சந்தலண்ட் தோட்டம்) | 246 | 3 | 9 |
| 38 | பொத்தெனியேதொல(அரைவாசி விசாலம்) | 0 | 0 | 36 |
| 39 | எல (அரைவாசி விசாலம்) .. | 0 | 0 | 14 |
| | மொத்தம் .. | 258 | 2 | 30 |

[இரத்தினபுரி நி. உ. 26—1935.]

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மககொல கிராமச்சங்க ஞேட்டுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 468. குறிச்சி—மக்கொல வடக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பில்லேவகும்புற அல்லது மன்கடகும்புற | நெல் வயல் .. | டி. எம். விஜயசிங்க அப்புகாமி, பியன்வில இகல | 0 | 0 | 2·3 |
| 3 | யம்புககும்புற .. | நெல்வயலும் எலவின் பகுதியும் | வெலிகமகே புஞ்சிகோறு பயஸ்சம், வீரசிங்க ஆராச்சிகே டொன் தோமஸ் ஜயவர்தன, தலுப்பிற்றிய, சூரிய ஆராச்சிகே யொகானெஸ், பியன்வில பகல | 0 | 1 | 7·1 |
| 4 | பில்லேவகும்புற அல்லது மன்கடகும்புற | நெல்வயல் .. | டி. எம். விஜயசிங்க அப்புகாமி, பியன்வில இகல | 0 | 0 | 1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஸ்ரீ வைகாசி மாசம் 28 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1935 ம் ஸ்ரீ சித்திரைமீ 23 ந் உ.

கார்ள். ஈ. ஆண்ட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கண்டலாமவில் ஒரு பகிரங்கக் கற்கூசக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 472. குறிச்சி.—வல்பொத்தலே.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | புருங்கும்புறவத்த | தென்னங்காணி, 35 வருஷம்சென்ற 3 தென்னையும், 20 வருஷம்சென்ற 1 டோம்பமரமுமுள்ளது | டி. ஜெ. அமரதுங்க முகாந்திரம் கண்டலாம | 0 | 0 | 7·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஸ்ரீ வைகாசி மாசம் 31 ந் தேதியிலன்று 10 மணிக்கு மீறிகம வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1935 ம் ஸ்ரீ சித்திரைமீ 23 ந் உ.

கார்ள். ஈ. ஆண்ட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் றத்தோட்டை குப்பைக்கிடங்கு என்னும் பகிரங்கவைக்கு வேண்டியதானபின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல. A 244. குறிச்சி—குறுவாவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | லோங்வில்லே எஸ்தேற் | 5 வயது துடங்கி 15 வயசுள்ள றப்பர் (கற்பாருள்ள பூமி) ஓர் கட்டுக்கிணறுமுண்டு | றத்தோட்டை லோங்வில்லே எஸ்தேற்றிலுள்ள சி. ஜி. றீத் | 1 0 4·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஸ்ரீ ஆனி மாசம் 12 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1935 ம் ஸ்ரீ சித்திரைமீ 13 ந் உ.

ஆர். ஜே. டேனியல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யாலேகம—மிரிஸ்வத்த டிஸ்திறிக்ற் றோட் கொமிற்றி பாதை விரிவாக்குதல் என்னும் பகிரங்கதேவைககு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல. A 259. குறிச்சி—யாலேகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளவில வத்த | பின்குறித்துள்ளன வடங்கியதோட்டம், 40 வயது தென்னை 1, 40 வயது ஈரப்பலா 1, 20 வயது தென்னை 1, ஓலைக்கூரையுள்ள ஒரு தற்காலிக வீட்டின் ஓர் பாகம் | (1) ரன்சகொடகே என்சோகாமி, (2) பரணமானகே ஏபிரகாம், (3) பரணமானகே பீரிஸ் சிங்கோ, (4) பரணமானகே வில்லியம், (5) பரணமானகே பேபிநோனா, (6) பரணமானகே நியலிஸ்ஹாமி, (7) பரணமானகே நொன்னஹாமி. (8) பரணமானகே றுவன்காமி, (9) பரணமானகே நோறிஸ் சிங்கோ, (10) பரணமானகே பிலக்சிங்கோ, (11) பரணமானகே பேடிறிக், (12) பரணமானகே பொடிசிங்கோ. (13) பரணமானகே நோனஹாமி, (14) பரணமானகே அல்பி சிங்கோ, (15) பரணமானகே பபாசிங்கோ, (16) பரணமானகே அகிதாஹாமி, (17) பரணமானகே ரத்தேரிஸ், (18) பரணமானகே வெலின், (19) சியதோரிஸ் கன்னங்கர, (20) இற்றபான பையாகலகே நோமிஸ், (21) இற்றபான பையாகலகே கெச்சிநோனா, (22) பரணவியனகே நொன்னஹாமி, (23) இற்றபானபையாகலகே கொரனேலிஸ், எல்லோரும் யாலேகம வாசிகள் | 0 0 2·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருககிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1935 ம் ஸ்ரீ (மே) வைகாசி மாசம் 27 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1935 ம் ஸ்ரீ ஏப்ரல்மீ 23 ந் உ.

டபிள்யு. டீ. குணரத்ன,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பணவலவில் புதுப்பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லடும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 190. குறிச்சி—பணவல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 30E | கல்கபள்ளேகேன | .. தோட்டம் | .. எச். ஏ. ஐ. எலபாத | .. 1 1 21·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (மே) வைகாசி மாசம் 21 ந் தேதியிலன்று முற்பகல் 9.30 மணிக்கு மாதம்பே வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1935 ம் ௵ சித்திரை௴ 16 ந் ௳.

என். ஈ. ஏன்ஸ்ற்,
சப்பிரகாம மாகாண அரசாட்சிஏசண்டு.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

### 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவிற்சுட்டிய 1 ம் அட்டவணையின் B பிரிவின்படி அறிவித்தல்.

மட்டுக்களப்பு ஆரப்பற்றை, பரமக்குட்டியார் ஐயம்பிள்ளை ஆகிய நான், என்னை மட்டுக்களப்பு டிஸ்திறிக் கருங்கொட்டித்தீவிலே தமிழ்ப்பாஷையில் வேலைபார்க்கும் நொத்தார்ஸ்வாக ஏற்றுகொள்ளும்படி இன்று தொடக்கம் மூன்று மாசங்களுக்குப்பின் பதிவுகாரியஸ்த தலைவர் அவர்களுக்கு விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

மட்டக்களப்பு,
1935 ம் ௵ பங்குனி௴ 16 ந் ௳.

ப. ஐயம்பிள்ளை.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.